7. **உடன்படிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர்கள் கொண்டுள்ள ஊக்கம்**

கம்பனியுடன் உடன்படிக்கைகளை செய்துகொள்வதற்கு பணிப்பாளர்களுக்கு ஊக்கம் இல்லை என்பதை பணிப்பாளர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

## 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புக்கள்

| | | | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|---|---|
| 1 | **வருமானம்** | | | |
| | விற்பனை | | 306,585,103 | 289,083,702 |
| | குறைக்க : தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | | - | (1,914,857) |
| | | | 306,585,103 | 287,168,845 |
| 2 | **விற்பனைச் செலவினம்** | | | |
| | ஆரம்ப இருப்பு | | 13,456,986 | 13,194,446 |
| | கூட்டுக : கொள்வனவு | | 146,426,023 | 152,166,888 |
| | | | 159,883,009 | 165,361,334 |
| | குறைக்க : இறுதி இருப்பு | | (6,957,004) | (13,456,985) |
| | | | 152,926,005 | 151,904,349 |
| 3 | **ஏனைய செயற்பாட்டு வருமானம்** | | | |
| | ஊழியர் கடனுக்கான வட்டி | | 1,148,761 | 1,220,756 |
| | நிலையான வைப்புக்கள், ஏனைய வைப்புக்களுக்கான வட்டி | | 28,612,210 | 35,816,742 |
| | வேறு வருமானங்கள் | | 1,445,000 | 1,440,033 |
| | நிலையான சொத்து விற்பனை மூலம் பெற்ற இலாபம் | | 1,827,000 | - |
| | | | 33,032,969 | 38,477,530 |
| 4 | **செயற்பாட்டு இலாபம்** | | | |
| | பின்வரும் செலவினங்களுக்கு அறவீடுகள் செய்த பின்னர் செயற்பாட்டு இலாபம் காட்டப்பட்டுள்ளது. | | | |
| | தேய்மான ஏற்பாடு | | 21,172,167 | 20,433,802 |
| | கணக்காய்வாளர் கட்டணம் | | 300,000 | 250,000 |
| | ஊழியர் செலவினம் (குறிப்பு 4.1) | | - | - |
| 4.1 | **ஊழியர் செலவினம்** | | | |
| | சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய உரிய செலவினங்கள் | | 44,203,997 | 42,256,621 |
| | சேவைப் பணிக்கொடை | | 2,415,494 | 2,190,511 |
| | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் | | 5,538,462 | 5,289,517 |
| | | | 52,157,953 | 49,736,649 |
| | **பின்வரும் விபரங்கள் மேலே உள்ளடக்கப்பட்டுள்ளது.** | | | |
| | தவிசாளரின் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளரின் வேதனாதிகள் | | 880,000 | - |
| | பணிப்பாளர்களின் கட்டணம் | | 612,000 | - |
| 5 | **வரியீட்டல்** | | | |
| | **நிகழ்கால வருமான வரி** | | | |
| | பொதுவான நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்கால வருமான வரி | குறிப்பு 5.1 | 13,238,576 | 11,302,813 |
| | பிற்போடப்பட்ட வருமான வரிக் கட்டணம் / (மீளச்செலுத்தல்) | குறிப்பு 5.2 | 42,109,019 | 18,889,752 |
| | | | 55,347,595 | 30,192,565 |

| | | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| 5.1 | **கணக்கு இலாபம் மற்றும் வரி இலாபத்தை ஒப்பிடுதல்** | | |
| | கணக்குகளுக்கு அமைய தேறிய இலாபம் | 82,029,740 | 73,380,727 |
| | அங்கீகாரம் வழங்க முடியாத செலவினங்களின் கூட்டுத்தொகை | 25,682,366 | 23,195,152 |
| | | 107,712,106 | 96,575,879 |
| | அங்கீகாரம் வழங்கக் கூடிய செலவினங்களின் கூட்டுத்தொகை | (42,911,457) | (52,212,748) |
| | வியாபார இலாபம் | 64,800,649 | (44,363,131) |
| | வட்டி வருமானம் | 29,760,611 | 36,371,245 |
| | முழுமையான நியாயதிக்க வருமானம் | 94,561,260 | 80,734,376 |
| | வரி இலாபம் | 13,238,576 | 11,302,813 |
| | | 13,238,576 | 11,930,470 |
| 5.2 | **பிற்போடப்பட்ட வரிச் செலவினம் / (வருமானம்)** | | |
| | கால மாற்றம் காரணமாக ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்ட வரிச் செலவினம் | 42,182,396 | 18,955,798 |
| | **ஒப்பீட்டு ரீதியான வருமானத்திலிருந்த பெற்ற வரி** | (73,377) | (66,046) |
| | | 42,109,019 | 18,889,752 |

**6 ஒரு பங்குக்கான உழைப்பு**

**6.1** ஒரு பங்குக்கான ஆரம்ப உழைப்பு கணிப்பிடப்படுவது குறித்த ஆண்டில் செலுத்தப்படாத சாதாரண பங்குகளின் எண்ணிக்கையின் சராசரியிலிருந்து சாதாரண பங்குதாரர்களுக்கு உரித்தானதாகக் கருதப்படுகின்ற குறித்த ஆண்டுக்கான தேறிய இலாபத்தை பகிர்ந்தளிப்பதன் மூலமாகும். பணிக்கொடை சிக்கல்கள் போன்ற, வளங்களுக்கு சமாந்தரமான மாற்றம் இன்றி செலுத்தப்படாத சாதாரண பங்குகளின் எண்ணிக்கை மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களுக்கு இந்த ஆண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் செலுத்தப்படாத சாதாரண பங்குகள் எண்ணிக்கையின் சராசரிக்கு சீராக்கல் செய்யப்படுகின்றது.

**6.2** 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான பங்குகளை கணிப்பிடுவது அடிப்படை உழைப்புக்களின் போது பயன்படுத்தப்பட்ட வருமானம் மற்றும் பங்குகளின் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| **பெறுமானங்களாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அளவுகள்** | | |
| தேறிய இலாபம் / (நட்டம்) | 27,132,887 | 43,593,872 |
| ஒரு பங்குக்கான உழைப்புக்காக சாதாரண பங்குரிமையாளர்களுக்கு உரித்தானதாகக் கருதப்படும் தேறிய இலாபம் | 27,132,887 | 43,593,872 |
| **பெறுமானங்களாக பயன்படுத்திக் கொள்ளப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை** | | |
| ஒரு பங்கின் அடிப்படை உழைப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கையின் சராசரி | 4,000,000 | 4,000,000 |
| | 4,000,000 | 4,000,000 |
| ஒரு பங்கின் உழைப்பு | 6.78 | 10.90 |

**7 ஒரு பங்குக்கான பங்கிலாபம்**

| | | |
|---|---|---|
| **பெறுமானங்களாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அளவுகள்** | | |
| ஆண்டுக்கான பங்கிலாபம் | - | 3,000,000 |
| **பெறுமானங்களாக பயன்படுத்திக் கொள்ளப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை** | | |
| ஒரு பங்கின் பங்கிலாபம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சாதாரண பங்குகள் | 4,000,000 | 4,000,000 |
| ஒரு பங்கின் பங்கிலாபம் | - | 0.75 |

8 ஆதனம், சொத்து மற்றும் உபகரணம்

| சொத்துக்களின் விபரம் | செலவினம்/ விலைமதிப்பீடு | | | | தேய்மானம் | | | | W.D.V | W.D.V |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020.01.01 ஆம் திகதிக்கு மீதி | ஆண்டில் கொள்வனவு | அகற்றல் | 2020.12.31 ஆம் திகதிக்கு மீதி | 2020.01.01 ஆம் திகதிக்கு மீதி | ஆண்டுக்கு | அகற்றல் அடிப்படையில் | 2020.12.31 ஆம் திகதிக்கு மீதி | 2020.01.01 ஆம் திகதிக்கு மீதி | 2020.12.31 ஆம் திகதிக்கு மீதி |
| காணி | 70,000,000 | - | - | 70,000,000 | - | - | - | - | 70,000,000 | 70,000,000 |
| கட்டிடம் | 64,275,514 | - | - | 64,275,514 | 10,136,641 | 2,438,936 | - | 12,575,577 | 54,138,873 | 51,699,937 |
| பொறியும், இயந்திரசாதனங்களும் | 15,284,291 | - | - | 15,284,291 | 8,162,571 | 1,792,372 | - | 9,954,943 | 7,121,720 | 5,329,348 |
| தளபாடமும், பொருத்தல்களும் | 3,052,176 | - | - | 3,052,176 | 2,062,144 | 171,035 | - | 2,233,179 | 990,032 | 818,997 |
| அலுவலக உபகரணம் | 5,378,433 | 230,546 | - | 5,608,979 | 2,683,253 | 528,037 | - | 3,211,290 | 2,695,180 | 2,397,689 |
| கணினி | 4,739,233 | 408,050 | - | 5,147,283 | 3,955,543 | 485,919 | - | 4,441,462 | 783,690 | 705,821 |
| மோட்டார் வாகனம் | 34,935,915 | - | (1,600,000) | 33,335,915 | 34,630,335 | 305,580 | (1,600,000) | 33,335,915 | 305,580 | - |
| கொள்கலன் மற்றும் சிலிண்டர் | 244,277,033 | - | - | 244,277,033 | 92,753,359 | 15,295,715 | - | 108,049,074 | 151,523,674 | 136,227,959 |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 1,332,188 | - | - | 1,332,188 | 611,916 | 134,578 | - | 746,494 | 720,272 | 585,694 |
| தொடர்பாடல் மற்றும் மருத்துவ உபகரணங்கள் | 456,598 | 23,900 | - | 480,498 | 435,175 | 19,993 | - | 455,168 | 21,423 | 25,330 |
| | 443,731,381 | 662,496 | (1,600,000) | 442,793,877 | 155,430,937 | 21,172,166 | (1,600,000) | 175,003,103 | 288,300,444 | 267,790,774 |

| | | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|---|
| 9 | **தற்போதைய இருப்பு** | | |
| | திரவ குளோரின் - 900 கி.கி. | 5,231,474 | 8,698,778 |
| | திரவ குளோரின் - 68 கி.கி. | 410,865 | 218,374 |
| | கோஸ்ரிக் சோடா | 1,213,165 | 2,200,716 |
| | ஹைட்ரோகுளோரிக் அமிலம் | - | 1,339,118 |
| | பிளீசின் திரவம் | 101,500 | |
| | | 6,957,004 | 13,456,986 |
| | **வேறு இருப்புக்கள்** | | |
| | குளோரின் வேல்வ் - ஸ்பின்டில்ஸ், வொசஸ், புரொரெக்டர்ஸ், ஸ்பெனர்ஸ் மற்றும் வேல்வ்ஸ் கம்பலீட் | 13,018,935 | 12,023,243 |
| | புரொரெக்ரிவ் ஹுட்ஸ் | - | - |
| | அவசர சந்தர்ப்பங்களுக்கான உபகரணத் தொகுதி | - | - |
| | எழுதுகருவிகள் | - | - |
| | | 13,018,935 | 12,023,243 |
| | | 19,975,939 | 25,480,229 |
| 10 | **குறுங்கால முதலீடுகள்** | | |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 49,199,869 | 45,808,605 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 55,941,508 | 52,203,327 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 14,508,260 | 13,508,230 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 7,561,654 | 7,016,211 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 14,840,265 | 13,769,796 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 14,882,633 | 13,856,798 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 14,539,450 | 13,476,808 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 15,426,412 | 14,314,470 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 14,838,242 | 13,768,229 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 7,570,403 | 7,023,148 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 10,000,000 | 7,871,072 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 13,675,199 | 12,701,926 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 13,721,420 | 12,775,626 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 14,051,884 | 13,067,592 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 13,224,295 | 12,335,585 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 13,404,873 | 12,302,741 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 25,609,622 | 23,475,295 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 38,094,923 | 35,115,470 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 23,709,618 | 22,088,944 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 11,304,798 | 10,489,352 |
| | நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 11,215,515 | 10,442,449 |
| | நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி | 10,968,351 | 10,197,838 |
| | நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி | 10,932,613 | 10,197,838 |
| | நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி | 10,125,000 | - |
| | நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி | 10,000,000 | - |
| | நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி | 10,000,000 | - |
| | | 449,346,806 | 387,807,350 |

**11 பிரகடனம் செய்யப்பட்ட மூலதனம்**
**உள்ளடங்குவது**

வெளிப்படுத்தியுள்ளவாறு மூலதனம்

| | | |
|---|---|---|
| 4,000,000 சாதாரண பங்குகள் குறிப்பு 11.1 | 40,000,000 | 40,000,000 |
| | 40,000,000 | 40,000,000 |

**12 உரிமைகளின் வேறு கூறுகள்**
**ஆதனம், பொறி மற்றும் இயந்திரசாதனங்களின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**

| | | |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்ப மீதி | 219,195,490 | 220,795,490 |
| ஆண்டில் மீள்மதிப்பீட்டு மிகை | | |
| மீள்மதிப்பீடுகளை மீளத்திருப்புதல் | | |
| ஆண்டின் இறுதி மீதி | 219,195,490 | 220,795,490 |

2010.12.31 ஆம் திகதிக்கு ஆனதம், பொறி மற்றும் உபகரணங்களில் காணப்பட்ட நியாயமான பெறுமதியை தீர்மானிப்பதற்கு கம்பனி ஆண்டினுள் அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தினூடாக விலைமதிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. 2010.12.31 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதிகளை அடிப்படையாகக் கொள்ளப்பட்டவையாகும்.

| சொத்துக்கள் | 2010.12.31 திகதிக்கு தேறிய பேணிவரப்படும் பெறுமதி ரூபா | 2010.12.31 ஆம் திகதிக்கு மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் ரூபா | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா |
|---|---|---|---|
| காணி | 538,000 | 70,000,000 | 69,462,000 |
| பொறியும், இயந்திரசாதனமும் | 181,790 | 1,138,000 | 956,210 |
| தளபாடம் மற்றும் பொருத்தல்கள் | 1,208,140 | 1,925,000 | 716,860 |
| அலுவலக உபகரணம் | 461,909 | 1,511,700 | 1,049,791 |
| கணினி உதிரி பாகங்கள் | 741,648 | 916,850 | 175,202 |
| மோட்டார் வாகனம் | 192,128 | 12,195,037 | 12,002,909 |
| மிதி வண்டி | 1 | 2,500 | 2,499 |
| சிலிண்டர் | 36,892,075 | 173,033,000 | 136,140,925 |
| உபகரணம் மற்றும் அம்சங்கள் | 30,216 | 319,310 | 289,094 |
| | 40,245,907 | 261,041,397 | 220,795,490 |

**13 ஓய்வூதியப் பயன்களின் கடப்பாடு**
**பணிக்கொடைக்கான ஏற்பாடு**

| | | |
|---|---|---|
| 2020.01.01 ஆம் திகதிக்கு மீதி | 11,028,082 | 12,932,769 |
| ஏற்பாடுகளின் கீழ் | - | - |
| ஆண்டினுள் கொடுப்பனவு | 945,259 | 955,425 |
| ஆண்டினுள் வட்டி வருமானம் | 1,407,235 | 1,235,087 |
| ஒப்பீட்டு ரீதியான வருமானக் கூற்றுக்கு ஒதுக்கம் | 13,380,576 | 15,123,281 |
| வேறு ஒப்பீட்டு ரீதியான வருமானக் கூற்றுக்கு ஒதுக்கம் உண்மையான நட்டம் | | |
| நட்டம் | (524,120) | (471,756) |
| குறைக்க – ஆண்டினுள் காசாக செலுத்தல் | (847,116) | (3,623,443) |
| ஆண்டின் இறுதியில் மீதி | 12,009,340 | 11,028,082 |

**13.1** 2015.12.31 ஆம் திகதிக்கு குறித்த பயன்களின் பொறுப்புக்களின் பெறுமதியை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்ட அளவைகள் பின்வருமாறாகும்.

| | 2020 | 2019 |
|---|---|---|
| கழிவு விகிதம் | 12% | 12% |
| வருடாந்த சம்பள ஏற்ற விகிதம் | 10% | 10% |
| பதவியணி புரள்வு | 5% | 5% |

**14 <u>பிற்போடப்பட்ட வரி</u>**

| | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|
| 2020.01.01 ஆம் திகதிக்கு நிலுவை | 61,091,783 | 42,135,985 |
| ஆண்டுக்குரிய மாற்றல்கள் | 42,182,396 | 18,955,798 |
| 2020.12.31 ஆம் திகதிக்கு மீதி | 103,274,179 | 61,091,783 |

**15 <u>எதிர்பாராத பொறுப்புக்கள்</u>**

தொகை ரீதியாக குறிப்பிடத்தக்களவு எந்தவொரு எதிர்பாராத பொறுப்பும் ஐந்தொகைக்கு வரவில்லை.

**16 <u>ஐந்தொகை திகதியின் பின்னரான சம்பவங்கள்</u>**

சீராக்கல்கள் அல்லது ஈடுசெய்தல்களுக்குத் தேவையான சம்பவங்கள் எதுவும் ஐந்தொகை திகதி முதல் இந்த அறிக்கையின் திகதி வரை எழுந்திருக்கவில்லை.

**17 <u>வெளிப்படுத்தல்கள்</u>**

**<u>மீள்நிரப்பல் செயன்முறை</u>**

ஆண்டினுள் களுத்துறை நாகொட மீள்நிரப்பல் பிரிவில் இடம்பெற்ற குளோரின் கசிவு காரணமாக குறித்த மீள் நிரப்பல் பணியை ஹொரனை கைத்தொழில் பிரிவில் அமைந்துள்ள புதியதொரு இடத்திற்கு மாற்ற வேண்டி ஏற்பட்டது. இதற்காக ரூ.மி. 7.2 ஆன தொகை செலவிடப்பட்டது. இந்த இடத்தில் இடம்பெற்ற மாற்றம் காரணமாக பருமட்டான இலாபம் குறைவடைய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

**18 <u>ஒரு பங்கின் பங்கிலாபம்</u>**

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கு

| | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|
| பிரகடனம் செய்த இறுதி பங்கிலாபம் | - | 3,000,000 |
| சாதாரண பங்குகளுக்கு அமைய எண்ணிக்கை | 4,000,000 | 4,000,000 |
| ஒரு பங்கின் பங்கிலாபம் | | 0.75 |

## நிறுவன ரீதியான திட்டம் - உபாயமுறையிலான வியாபார அலகு

உபாயமுறையிலான வியாபார அம்சங்கள்




உபாயமுறையிலான இலக்குகள்

**தரப்பினர்கள் / சேவைகள்**

- நீர் சுத்திகரிப்பு செயன்முறை
- இறப்பார் சார்ந்த உற்பத்திகள்
- சவர்க்காரம் மற்றும் கிருமிநாசினி உற்பத்தி
- ஆடை உற்பத்திக் கைத்தொழில்
- நீச்சல் தடாகங்களை சுத்தம் செய்யும் இரசாயனங்களை வழங்குதல்
- குடிபானம் மற்றும் உணவு பொதிகளை சுத்தம் செய்பவை
- கடதாசி உற்பத்தி செயன்முறை
- கெல்வனைஸ் கைத்தொழில்
- இந்திய, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேச வழங்குனர்கள் பங்காளர்கள்

## நிறுவன ஒழுங்கமைப்பு




**குறிப்பு**

தற்போது கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் வெளியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. (உள்ளகக் கணக்காய்வாளர் கே. லியனகே என்ட் கம்பனி பட்டயம் பெற்ற கணக்காளர்)

## 2019, 2020 ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டு மற்றும் நிதித் தகவல்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட தகவல்கள்

**2019, 2020 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு மற்றும் நிதிசார் தகவல்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட தகவல்கள்**

| | 2019 உண்மை ரூபா '000 | 2020 உண்மை ரூபா '000 | 2021 வரவு வரவு செலவுத்திட்ட ரூபா '000 |
|---|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 299,081 | 289,547 | 549,030 |
| நடைமுறை சொத்துக்கள் | 494,810 | 574,173 | 375,000 |
| மொத்த சொத்துக்கள் | 793,890 | 863,720 | 924,030 |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கம்** | | | |
| பங்குரிமை | 662,160 | 679,220 | 711,030 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 72,120 | 115,284 | 100,000 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 59,610 | 69,217 | 113,000 |
| மொத்த பங்குகள், பொறுப்புக்கள் | 793,890 | 863,720 | 924,030 |
| வருமானம் | 287,169 | 306,585 | 338,630 |
| விற்பனை செலவினம் | (151,904) | (152,926) | (141,658) |
| மொத்த இலாபம் $(நட்டம்) | 135,264 | 153,659 | 196,972 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 38,478 | 33,033 | 33,750 |
| | 173,742 | 186,692 | 230,722 |
| நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் / (நட்டம்) | 73,633 | 82,083 | 115,800 |
| வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்) | 73,381 | 82,030 | 115,500 |
| வரிக்குப் பிந்திய தேறிய இலாபம் / (நட்டம்) | 43,188 | 26,682 | 92,500 |
| ஒரு பங்கின் உழைப்பு | 10.80 | 6.67 | 23.13 |
| ஒரு பங்கின் பங்கிலாபம் | 0.75 | - | 5.00 |

## கம்பனியின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்

1975 ஆம் ஆண்டு முதல் கொழும்பு 13, ஸ்ரீ ராமநாதன் மாவத்தையில், துறைமுக அதிகாரசபையிடம் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடமொன்றில் தமது தலைமை அலுவலகம் மற்றும் கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் களஞ்சியத்தை பேணிவருகின்றது.

கம்பனியின் பிரதான செயற்பணியாக நாட்டினதும், சந்தையினதும் தேவைகளுக்கு அமைய குளோரின், கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்வதை அறிமுகம் செய்ய முடியும்.

குளோரின் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகள் மிகவும் பாதுகாப்பான முறையில் சனநெரிசல் இல்லாத இடங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாக உள்ளதனால் களுத்துறை மாவட்டத்திற்கு உரித்தான ஹொரனை கைத்தொழில் பேட்டையில் களஞ்சியமொன்று பேணிவரப்படுகின்றது.

ஹொரனை கைத்தொழில் பேட்டையில் பேணிவரப்படுகின்ற இந்த சிலிண்டர்களை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகள் காரணமாக எமது நிறுவனத்திற்கு பாரியளவு நிதியை தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டது. இதனால் நிறுவனம் சமர்ப்பித்த கோரிக்கையை கவனத்தில் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி கௌரவ அமைச்சர் குமார வெல்கம அவர்கள் முன்வைத்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய, மேன்மைதங்கிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மகிந்த சிந்தனை எண்ணக்கருவை அமுல்படுத்தும் வகையில் 2006.11.22 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் களுத்துறை புலர்டன் கைத்தொழில் பேட்டையில் இரண்டு ஏக்கர் காணி (காணித்துண்டு இலக்கம் 558 1$2 மற்றும் 558 2$2) நீண்டகால குத்தகை அடிப்படையில் பரந்தன் கெமிகல்ஸ் கம்பனிக்கு (2009 நவம்பர் 29 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில்) வழங்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி முதல் களுத்துறை புலர்டன் கைத்தொழில் பேட்டையில் 900 கி.கி. சிலிண்டர்கள் முதல் 68 கி.கி. சிலிண்டர்களுக்கு குளோரின் மீள்நிரப்புவது ஆரம்பிக்கப்பட்டது. இந்த புதிய நடவடிக்கையை அடுத்து தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த பாரியளவு நிதியை சேமித்துக் கொள்ள முடிந்தது. குறிப்பாக 2012 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு ரூ.மி. 32.015 ஆன வரிக்கு முன்னரான இலாபத்தையும், 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு ரூ.மி. 37.16 ஆன வரிக்கு முன்னரான இலாபத்தையும் உழைத்துக் கொள்ள முடிந்தது.

கம்பனி தெரிவு செய்துகொண்ட புதிய இரசாயனப் பதார்த்தங்கள் சிலவற்றை விற்பனை செய்வதை 2012 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அண்மைக் காலத்தில் களுத்துறை புலர்டன் பிரிவில் இடம்பெற்ற குளோரின் கசிவை அடுத்து நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட பாரிய தாக்கம் காரணமாக அதனை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு களுத்துறை பிரிவில் இடம்பெற்ற குளோரின் கசிவை அடுத்து அப்பணிக்கு உகந்த இடமொன்றை தேடிப் பெற்றுக் கொள்ள கம்பனிக்கு முடியவில்லை. இதன் காரணமாக 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட புதிய இரசாயன பதார்த்தங்களின் உற்பத்தியை ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டது. இது கம்பனியின் இலாபத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் இந்த ஆண்டின் ஆரம்ப பகுதியில் இலங்கை முதலீட்டு சபைக்கு உரித்தான 2 1$2 ஏக்கர் அளவான காணி ஹொரணை வகவத்த கைத்தொழில் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், அதற்கமைய குளோரின் மீள்நிரப்பல் பிரிவை அவ்விடத்தில் தாபிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கனிசமானளவு தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதன் காரணமாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கும் ஆற்றலும் இதன் மூலம் கிடைக்கும்.

## நிறுவனம்சார் நல்லாட்சி

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியானது, உயர் நல்லாட்சிக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு கடும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற நிறுவனமொன்றாகும். நல்லாட்சி எண்ணக்கரு பிரதானமாக நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறை மற்றும் ஊழியர்களை பொதுவான விதிகளுடன் தொடர்புபடுத்தி கம்பனியின் பங்குதாரர்கள் மற்றும் விருப்பம் கொண்ட தரப்பினர்களின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான எண்ணக்கருவாகும். நல்ல முகாமைத்துவம், நன்னெறிகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், முகாமைத்துவம் மற்றும் வியாபார நிருவாகத்திற்கும் மற்றும் அதன் தரப்பினர்களுக்கும் உயர் பயன்களைப் பெற்றுக் கொடுக்க வழிவகுக்கின்றது. மேலும் சேவைகளின் வகைப்பொறுப்புக்கூறலும் நல்லாட்சிக் கொள்கைகளின் ஒரு அம்சமாகும்.

இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம் மற்றும் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாட்சி பற்றிய விதிகள் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிசார் விதிகள் தொடர்பில் எமது கம்பனி வெளிப்படுத்தும் இணங்கியொழுகுதலானது இந்த நிறுவனம்சார் நல்லாட்சி பற்றிய அறிக்கையிலும், பணிப்பாளர்களின் அறிக்கையிலும், கணக்காய்வுக் குழு அறிக்கையிலும் நல்ல முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபை**

நிறுவனத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றிகரமான நிலைமை தொடர்பான பிரதான பொறுப்பை பணிப்பாளர் சபை கூட்டாக ஏற்றுக் கொள்கின்றது. பணிப்பாளர் சபையின் செயற்பணியான தொழில்முயற்சிசார் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் விளைதிறன்மிக்க சட்டகத்துக்குள் வழங்கப்படுவதனால் நிறுவனதிதன் அபாயங்களை இனங்காண்பதற்கு முகாமைத்துவத்துக்கு வழிவகுக்கின்றது. அவர்களின் உபாயமுறையிலான நோக்கு, நிறுவனத்தின் நிதி மற்றும் மனிதவளத்தை நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குப் பயன்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்தின் விளைதிறன்மிக்க கண்காணிப்பும் உறுதி செய்யப்படுகின்றது. மேலும் நிறுவனத்தின் பெறுமானங்கள் மற்றும் தரநியமங்களை தாபிப்பதற்கு மற்றும் பங்குதாரர்களின் மற்றும் ஏற்புடைய வேறு தரப்பினர்கள் தொடர்பில் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதும் உறுதி செய்யப்படும். பணிப்பாளர் சபைக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற விசேட பொறுப்புக்கள் பின்வருமாறாகும்.

- நிறுவனத்தின் நோக்கங்கள் வரவு செலவுத்திட்டம் மற்றும் எதிர்வுகூறல்களை தொடர்ச்சியாக பின்னாய்வு செய்தல்
- நடவடிக்கைசார் மற்றும் வெளிக்கள செயலாற்றுகையை பின்னாய்வு செய்தல்
- மூலதன முதலீட்டு வாய்ப்புக்களை இனங்காணல் மற்றும் முன்னோடியாக செயற்படுதல்
- விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை தாபிப்பதை உறுதி செய்தல்
- மிக்க உயர் மட்ட நன்னெறிகள் மற்றும் சட்டபூர்வமானதன்மையை உறுதி செய்தல்
- வருடாந்த கணக்குகளை வெளியிடுவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல்
- பங்குதாரர்களின் அங்கீகாரத்துக்கு வருடாந்த பங்கிலாபத்தை பிரேரித்தல்.

பணிப்பாளர் சபையானது தவிசாளர், திறைசேரியின் பிரதிநிதியான பணிப்பாளர் உள்ளடங்களாக நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் நான்கு போர் மற்றும் ஒரு நிறைவேற்றுப் பணிப்பாளரை உள்ளடக்கியுள்ளது. அவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபை கூட்டங்கள்**

கம்பனியின் முன்னேற்ற அறிக்கைகள் தொடர்ச்சியாக பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது ஆராயப்படுவதுடன், தரப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய மேலதிக விடயங்களையும் உள்ளடக்கியதாக கலந்துரையாடப்படும். பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதம் ஒரு தடவை நடாத்தப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் விசேட பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் நடாத்தப்படும். 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் கம்பனி தகைமைவாய்ந்த அதிகாரியொருவரின் கீழ் நிருவகிக்கப்பட்டு வந்தது.

| பணிப்பாளரின் பெயர் | பதவி | பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஆர்.கே.யு. ரணவீர | தவிசாளர் மற்றும் பணிப்பாளர் (நிறைவேற்று) | 12 |
| திரு டபிள்யு.யு.பேரேரா | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 11 |
| திரு ஏ.டி.எஸ்.கே. நந்தசிறி | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 12 |
| திரு எல்.யு.பீ. விக்ரமசிங்க | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 10 |
| திரு எஸ். அமரவீர | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 11 |
| திரு டி.கே. சுமணதாச | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 12 |
| திருமதி சீ.எச். ரணதுங்க | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 09 |
| திருமதி ஜே.பீ. பிரியங்கனீ | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 03 |

**முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

நிறுவனத்தின் தவிசாளர், பொது முகாமையாளர் மற்றும் நிறுவனத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்துடன் ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவை ஒரு கூட்டம் நடாத்தப்படுவதுடன், இதன் போது செயற்பாட்டு நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுதல் மற்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதும் இடம்பெறும். பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் வியாபார ரீதியான தீர்மானங்கள் விரிவாக பகுப்பாய்வு செய்யப்படுவது மற்றும் அமுல்படுத்த வேண்டிய முறை பற்றிய ஆரம்ப தீர்மானங்களை மேற்கொள்வது முகாமைத்துவக் குழுவினூடாக மேற்கொள்ளப்படும்.

**பணிப்பாளர் பதவிக் காலம், ஓய்வுறுத்தல் மற்றும் நியமனம் செய்துகொள்ளல்**

ஒவ்வொரு வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போதும் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையான பணிப்பாளர்கள் ஓய்வுறுத்தப்படுவார்கள் என்பதுடன் (பணிப்பாளர்கள் மூன்றின் மடங்காக உள்ள பட்சத்தில் அண்மித்த மூன்றில் ஒன்றுக்கு) மீண்டும் தெரிவு செய்துகொள்வதும் மேற்கொள்ளப்படும். நிறுவனத்தின் யாப்புக்கு அமைய தெரிவு செய்துகொள்ளப்படும் பணிப்பாளர் ஒருவர் அடுத்துவரும் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது மீண்டும் நியமனம் செய்துகொள்ளப்படல் வேண்டும்.

**கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்**

கணக்காய்வுக் குழு பிரதானமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்வதுடன் நல்ல உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினுள் காணப்படுவதற்கு இது உதவியாக அமையும். கணக்காய்வு குழு நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள் மூன்று பேரை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதுடன், அதன் தவிசாளராக திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் செயற்படுவார். கணக்காய்வுக் குழு தேவையான சந்தர்ப்பங்களில் உள்ளகக் கணக்காய்வாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் உயர் மட்ட முகாமைத்துவத்தின் உறுப்பினர்களை தமது கூட்டங்களில் பங்கேட்கச் செய்துகொள்ளும். கணக்காய்வு குழு தொடர்ச்சியாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள், விற்பனை அறிக்கைகள், முறைமை மற்றும் கட்டுப்பாடுகளை ஆராயும் என்பதுடன் தரத்தை மேம்படுத்திக் கொள்ளத் தேவையான சிபாரிசுகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

**கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றல் - 2020**

| wOHCIjre | | iyNd.sjq /iaúï ixLHdj |
|---|---|---|
| திருமதி ஜே.பீ. பிரியங்கனீ | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 02 |
| திருமதி சீ.எச். ரணதுங்க | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 02 |
| திரு ஏ.டி.எஸ்.கே. நந்தசிறி | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 04 |
| திரு எல்.யு.பீ. விக்ரமசிங்க | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 04 |

**உள்ளகக் கட்டுப்பாடு**

கம்பனியின் பங்குதாரர்கள் எதிர்பார்க்கும் உயர் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நிறுவனத்தின் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேவையான நல்ல உள்ளகக் கட்டுப்பாட்டு சூழலை உருவாக்கும் பொறுப்பை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. நிறுவனத்தின் வியாபார அபாய அச்சுறுத்தலை விளைதிறன் மற்றும் தகுந்த முறையியலுக்கு அமைய மேற்கொள்ளத் தேவையான கட்டமைப்புக்களை உருவாக்குவது பணிப்பாளர் சபையின் கொள்கையாகும். நிறுவனம் முகம் கொடுக்கக்கூடிய அபாய அச்சுறுத்தல்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் மற்றும் தீர்வுகளை சிபாரிசு செய்வது பற்றிய பொறுப்பை பணிப்பாளர் சபை கணக்காய்வுக் குழுவிடம் பொறுப்பளித்துள்ளது.

**நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதும், வெளிப்படைத்தன்மையும்**

நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன. வெளிக் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் காணப்படுகின்றது. தேவையான சகல தகவல்கள் மற்றும் அறிக்கைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் அவர்கள்களுக்கு தொழில்சார் சுதந்திரமாக கணக்காய்வு செய்வதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் அவர்களுக்கு இயலுமாயிற்று.

**அங்கீகரிக்கப்பட்ட நன்னெறிகள்**

ஏற்றுக்கொள்ளத்தக்க நடத்தையின் அடிப்படையில் சகல ஊழியர்களுக்கும் வழிகாட்டுவதற்கு ஒழுக்கம் பற்றிய சட்டம் காணப்படுகின்றது. ஒழுக்காற்று விதிகளின் பிரதான அம்சங்களாவன,

- சகல செயற்பாடுகளிலும் நியாயத்தன்மை, நேர்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை.
- சட்டங்கள் விதிகள் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு இணங்கியொழுகுதல்.
- கொடுக்கல் வாங்கல் செய்யும் சகல விடயங்களினதும் இரகசியத்தன்மை.

- கம்பனிக்கு பாதகமானதாக வெளிப்படுத்தப்படுகின்ற அல்லது பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ள நடத்தைகளிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

**நியாயாதிக்க கொடுப்பனவுகள்**

அரசுக்கு செலுத்த வேண்டிய சகல நியாயாதிக்க கொடுப்பனவுகளும் உரிய காலப்பகுதிக்குள்ளேயே செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கமைய ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன.

**நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதும், வெளிப்படைத்தன்மையும்**

2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான கணக்குகள் பணிப்பாளர் சபையினால் ஆராயப்பட்டதுடன், நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றி உண்மையாகவும், நியாயமாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்பில் திருப்தியுறுகின்றது. பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று இக்கணக்குகள் கூற்றின் 19 ஆம் பகத்தில் தரப்பட்டுள்ளது.

**தார்மீக நன்னெறிகள்**

நல்லாட்சியின் ஒரு பகுதியாக ஊழியர்கள் உயர்மட்ட தார்மீக நடத்தையைப் பேணிவருவது அத்தியாவசியமாகும் என்று பணிப்பாளர்கள் நம்புகின்றனர் என்பதுடன், ஊழியர்கள் நியாயமாகவும், நிறுவனத்திற்கு பக்கச்சார்புடனும் செயற்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. சகல ஊழியர்களும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வாடிக்கையாளர்கள், பங்குரிமையாளர்கள் மற்றும் சமுதாயத்தினருக்கு உச்சளவான சேவையை ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது,

**நியாயாதிக்க கொடுப்பனவுகள்**

அரசுக்கு செலுத்த வேண்டிய சகல நியாயாதிக்க கொடுப்பனவுகளும் உரிய காலப்பகுதிக்குள்ளேயே செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கமைய (2006 இன் திருத்திய) ஊழியர் பயன்களுக்கு ஏற்பட ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

**வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படுத்தல்**

2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான கணக்குகள் பணிப்பாளர் சபையினால் ஆராயப்பட்டதுடன், நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றி உண்மையாகவும், நியாயமாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்பில் திருப்தியுறுகின்றது. பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று இக்கணக்குகள் கூற்றின் 19 ஆம் பகத்தில் தரப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய**
**பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட்**

**எச்.எல். விபுல சில்வா**
**பணிப்பாளர் சபை செயலாளர்**

# கணக்காய்வுக் குழு அறிக்கை

**கணக்காய்வுக் குழுவின் செயற்பணி**

கணக்காய்வுக் குழுவின் நிதி அறிக்கையிடல், கணக்காய்வு செயன்முறை மற்றும் நல்ல உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அபாய முகாமைத்துவக் கட்டமைப்புக்கள், உள்ளகத் தொடர்புகள் பற்றி கற்றல் மற்றும் அதன் தரமான பண்புகள், குறைபாடுகள் மற்றும் தேவைகளை வளர்த்துக் கொள்வது பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவது கணக்காய்வுக் குழவின் பிரதான செயற்பணியாகும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தொடர்பிலான கண்காணிப்பு மற்றும் பின்னாய்வும் கணக்காய்வுக் குழுவின் செயற்பணியில் உள்ளடங்கும்.

- நிதிக் கூற்றுக்களின் நம்பகத் தன்மை மற்றும் பூரணமான தன்மை
- உள்ளகக் கட்டுப்பாட்டின் போதியளவான தன்மை மற்றும் பூரணத்துவம்
- உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வின் செயலாற்றுகைசார் விளைதிறன்
- நியாயாதிக்க மற்றும் சட்டரீதியாக ஏற்புடையதாதல்

**கணக்காய்வுக் குழு**

நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் மூவரைக் கொண்டதாக கணக்காய்வுக் குழு அமைந்துள்ளதுடன், திறைசேரியின் பிரதிநிதியான பணிப்பாளர் அதற்கு தலைமை தாங்குகின்றார். கணக்காய்வுக் குழு பின்வரும் பணிப்பாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

திருமதி ஜே.பீ. பிரியங்கனீ – கணக்காய்வுக் குழுவின் தவிசாளர்
திரு ஏ.கே.டி. நந்தசிறி – உறுப்பினர்
திரு எல்.யு.பீ. விக்ரமசிங்க – உறுப்பினர்

**கூட்டங்களும், பங்கேட்பும்**

கணக்காய்வுக் குழு 2020 ஆம் ஆண்டுக்கு 04 கூட்டத்தொடர்களை நடாத்தியுள்ளதுடன், அதன் போது கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டன. கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பங்கேற்பது பற்றிய தகவல்கள் நிறுவனத்தின் நல்லாட்சி பற்றிய அறிக்கையில் தரப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு தேவையான சந்தர்ப்பங்களில் உள்ளகக் கணக்காய்வாளர்கள், முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் உயர் மட்ட முகாமைத்துவ உறுப்பினர்களை தமது கூட்டத்தில் பங்குபற்றச் செய்துள்ளது.

**செயற்பணி**

வரைவு கணக்குகளை ஆராய்தல், வெளிக் கணக்காய்வாளரின் அறிக்கை, உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கை, மாதாந்த முன்னேற்ற அறிக்கை, விற்பனை அறிக்கை மற்றும் மோசடி, தவறுகள் மற்றும் கைவிடப்பட்டமை போன்றதாக ஏற்படக்கூடியதான தவறுகள் தொடர்பில் கலந்துரையாடுவதன் மூலம் மற்றும் பின்னாய்வு செய்வதன் மூலம் கணக்காய்வுக் குழு பெறுமதிமிக்க செயற்பணியை நிறுவனம் சார்பாக நிறைவேற்றுகின்றது. அபாய அச்சுறுத்தல்களை குறைப்பதற்கு மற்றும் முறைமையை மென்மேலும் வலுவூட்டி மோசடி, தவறுகள் மற்றும் குறைபாடுகள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்கள் முடிந்தளவு குறைக்கப்படுகின்றன.

**உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை**

2020 ஆம் ஆண்டு குழுவினால் உள்ளகக் கணக்காய்வாளர்களான, M/S ஜயதிலக்க என்ட் கம்பனி, பட்டயம் பெற்ற கணக்காளர்களினால் மேற்கொள்ளப்படட் கணக்காய்வின் பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்பட்டன. உள்ளகக் கணக்காய்வாளர் (2016 ஆம் ஆண்டுக்கு) சமர்ப்பித்த எந்தவொரு சிபாரிசையும் அமுல்படுத்துவது உட்பட எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பதில் நடவடிக்கைகளின் போதியளவான தன்மை கவனத்தில் கொள்ளப்பட்டது.

**இணங்கியொழுகுதல்**

கணக்காய்வுக் குழவானது, நியாயாதிக்க ஒதுக்கங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் ஏற்புடையதானதன்மை மற்றும் நம்பகமான இற்றைப்படுத்தப்பட்ட நிதிசார் தகவல்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விதிகள், அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, பெறுகை விதிகள் மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு அமைய மேற்கொள்வதற்கு பெரும் பங்களிப்பை பணிப்பாளர் சபைக்கு வழங்கியது.

**கணக்காய்வுக் குழு சார்பாக,**

**ஜே.பீ. பிரியங்கனீ**
**உறுப்பினர் - கணக்காய்வுக் குழு**
**2022 மார்ச் 03**

**எல்.யு.பீ. விக்ரமசிங்க**
**உறுப்பினர் - கணக்காய்வுக் குழு**

## 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான பிரதான நிதிசார் சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய ஐந்து வருட பொழிப்பு

| | 2020<br>ரூபா | 2019<br>ரூபா | 2018<br>ரூபா | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 306,585,103 | 287,168,845 | 302,627,105 | 334,330,049 | 257,567,095 |
| விற்பனை செலவினம் | (152,926,005) | (151,904,349) | (157,924,310) | (164,351,617) | (121,547,124) |
| மொத்த இலாபம் | 153,659,098 | 135,264,496 | 144,702,795 | 169,978,432 | 136,019,971 |
| ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | 33,032,969 | 38,477,530 | 33,279,066 | 28,576,511 | 19,875,872 |
| | 186,692,066 | 173,742,026 | 177,981,861 | 198,554,944 | 155,895,543 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் | (615,044) | (1,494,595) | (1,066,646) | (1,379,430) | (74,207) |
| நிருவாக மற்றும் தாபன செலவினம் | (103,994,475) | (98,614,771) | (102,402,002) | (97,143,590) | (93,983,932) |
| நிதிசார் செலவினம் | (52,808) | (251,933) | (249,297) | (132,586) | (134,915) |
| வரிக்கு முந்திய இலாபம் | 82,029,740 | 73,380,727 | 74,263,916 | 99,899,337 | 61,029,489 |
| வரி அறிவிடல் | (55,347,595) | (30,192,565) | (14,390,221) | (25,405,403) | (11,242,218) |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம் | 26,682,144 | 43,188,162 | 59,873,695 | 74,493,934 | 49,787,271 |
| பங்குதாரர்களுக்கு செலுத்திய பங்கிலாபம் | - | 3,000,000 | 10,000,000 | 11,000,000 | 7,000,000 |
| | | | | | |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 267,790,774 | 288,300,442 | 277,034,696 | 295,358,631 | 291,162,747 |
| மேற்கொண்டுவரும் வேலைகள் | 19,085,178 | 7,994,545 | 17,156,866 | 7,705,010 | 6,006,192 |
| நடைமுறை சொத்துக்கள் | 574,173,410 | 497,595,389 | 428,844,185 | 378,048,948 | 298,183,249 |
| மொத்த சொத்துக்கள் | 863,720,313 | 793,890,376 | 723,035,747 | 681,112,590 | 595,352,188 |
| | | | | | |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **மூலதனமும், திரட்டும்** | | | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | 40,000,000 | 40,000,000 | 40,000,000 | 40,000,000 | 108,500,000 |
| தடுத்துவைக்கப்பட்ட இலாபம் | 629,219,799 | 622,160,262 | 578,566,390 | 529,697,079 | 464,899,318 |
| பங்குதாரர்களின் நிதியம் | 679,219,799 | 662,160,262 | 618,566,390 | 569,697,079 | 504,899,318 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 115,283,519 | 72,119,865 | 55,068,753 | 51,205,107 | 45,440,962 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 69,216,994 | 59,610,248 | 49,400,604 | 60,210,404 | 45,011,908 |
| உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | 863,720,313 | 793,890,376 | 723,035,747 | 681,112,590 | 595,352,188 |

## கூட்டம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் 30 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம், 2022 மார்ச் மாதம் 28 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு, இரத்மலானை, காலி வீதி, இலக்கம் 446 எனும் முகவரியில் அமைந்துள்ள பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட் நிறுவன தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**நிகழ்ச்சிநிரல்**

1. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கம்பனி பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பிலான கணக்காய்வாளர்களின் அறிக்கையை சமர்ப்பித்தல்.
2. பணிப்பாளர்களின் சிபாரிசு செய்யப்பட்டுள்ளவாறு பங்கிலாபத்தை பிரகடனம் செய்தல்.
3. கம்பனி யாப்பின் 87 மற்றும் 88 ஆம் பிரிவுகளுக்கு அமைய பணிப்பாளர்கள் இருவரை மீண்டும் தெரிவு செய்துகொள்ளல்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

**எச்.எல். விபுல சில்வா**
செயலாளர்,
2022 மார்ச் 02.

**குறிப்பு :**

1. கூட்டத்தில் பங்குபற்றி வாக்களிப்பதற்கு உரிமை பெறும் உறுப்பினர் ஒருவருக்கு, அவர் சார்பாக பங்கேற்று வாக்களிக்க ஆளொருவரை நியமனம் செய்ய உரிமை உண்டு.
2. பதிலாள் ஒருவர் கம்பனியின் உறுப்பினராக இருப்பது அவசியமற்றது.
3. பதிலாள் மாதிரிப்படிவம் இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.